Written by - கலாநிதி சு. கணேஸ்வரன் -
Saturday, 18 January 2020 12:56 - Last Updated Saturday, 18 January 2020 13:05

ஆய்வுச் சுருக்கம் :

தொல்தமிழர் வாழ்வில் மூத்தோர் வழிபாடாக நடுகற் பண்பாடு அமைந்திருக்கின்றது. சங்கப் பனுவல்களின் தொகுப்பு முறையில் காலத்தால் முற்பட்டவையாகிய அகநானூறு புறநானூறு ஆகியவற்றில் பதுக்கை மற்றும் நடுகல் பற்றிய குறிப்புகள் அதிகம் உள்ளன. நடுகற்கள் எவ்வாறு வீரவழிபாடாகவும் சடங்குமுறையாகவும் மாற்றம் பெற்றன என்பதை இனங்காண்பதே இந்த ஆய்வின் நோக்கமாகும். பகுப்பாய்வு முறையியலை அடிப்படையாகக் கொண்டு சங்கப் பனுவல்களின் வைப்புமுறையில் இலக்கியங்களைப் பகுப்பாய்வு செய்து அவற்றில் நடுகல் குறித்த பாடல்களைத் தனியே வகையீடு செய்து விபரண முறையியல் அடிப்படையில் இந்த ஆய்வு மூன்வகைக்கப்படுள்ளது. கடவுள்களோடு பாடுகள் உருவாகுவதற்கு மூன்னரே தமக்கு மூன்னர் வாழ்ந்து தம்குடிகளைக் காத்து மடிந்த வீரர்களை மூத்தோராகக் கருதித் தலைமுறையாகத் தொடர்ந்த மரபே நடுகல் வழிபாடு என அறிய முடிகிறது. இதுவே பிற்காலத்தில் வழிபாட்டுச் சடங்காகவும் கிராமியத் தெய்வ மரபாகவும் மாற்றமுற்றதெனக் கருதமுடிகிறது.

□□□□□□□ □□□□□□□□ நடுகல், பதுக்கை, தொல்தமிழர் வழிபாடு, சங்கப் பனுவல்கள்

**1.** □□□□□□□□□

தமிழ்ப்பண்பாட்டின் வேர்களை சங்கப்பனுவல்களில் கண்டு கொள்ளமுடியும். எழுத்து வடிவிலான ஆதாரங்களாகிய அவை, தமிழ்த் தொல்குடிகளின் பண்பாட்டை அறிந்துகொள்ள உதவுகின்றன. சங்கப் பனுவல்களினூடாக பலியிடுதல், வெறியாட்டு, நடுகல் ஆகிய தொன்மையான வழிபாட்டு முறைகளையும் அவற்றுக்கூடாக மக்களின் பண்பாட்டையும் கண்டடையை முடிகிறது. அகநானூறு மற்றும் புறநானூற்றுப்

பாடல்களில் அதிகமும் நடுகல் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அப்பாடல்கள் குறிக்கும் தொல்கூப்பிப்பண்பாட்டை அறிவதன் ஊடாக மூதாதையர் வழிபாடாக நடுகற்கள் அமைக்கப்பட்டன என்ற உண்மையையும் கண்டடையை இயலும்.

**2. □□□□□□□ □□□□□□□□□□□□□ □□□□□□□□□ □□□□□□□□□ □□□□□□□□□□**

சங்க இலக்கியங்களில் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு, புறநானூறு, மலைபடுகடாம், பட்டினப்பாலை, பரிபாடல், திருமுருகாற்றுப்படை ஆகியவற்றில் மூப்பதுக்கும் மறேப்பட்ட பாடல்களில் நடுகல் வழிபாடு மற்றும் பதுக்கைகள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அவற்றுள் அகநானூறு (16 பாடல்கள்) மற்றும் புறநானூற்றுப் (12 பாடல்கள்) பாடல்களிலயேே இவை அதிகம் எடுத்தாளப்பட்டிருக்கின்றன. இவ்விரு இலக்கியங்களின்வழி நடுகல் வழிபாடு பற்றி நுண்மையாக நோக்கமுடியும்.

**(□) □□□□□□□□□□□□□□ □□□□□□□□□□□□□□**

‘நடுகல்’ என்பது வீரன் இறந்த இடத்திலோ அல்லது வறேு இடத்திலோ அவன் நினவைாக எழுப்பப்படும் நினவைுக்கல் ஆகும். இது வீரக்கல் (Hero Stones) எனவும் அழகைக்கப்பட்டது. இவை மூதலில் சபெ்பனிடப்படாத நினவைுக் கற்களாகவும் குத்துக்கற்களாகவும் அமகைக்கப்பட்டன. இறந்துபட்டோரின் வீரச்சயெல் புடபை்பூச் சிற்பமாகப் பொறிக்கப்பட்டனவும் வீரரின் பயெரும் அவர் பூகழ்மொழியும் எழுதப்பட்டனவனெவும் குறித்த சங்கப்பனுவல்களால் அறியப்படுகின்றன.

இறந்த வீரரின் உடலை மூடிய கற்குவியல்கள் ‘பதுக்கை’ என அழகைக்கப்பட்டன. இவை கல்பதுக்கை, கல்திட்டை என இறந்தோரை மூடிய அல்லது பூததை்த மடேுகளாக அமகைக்கப்பட்டிருந்தன. கற்பதுக்கைகள் மற்றும் இலை தழகைளால் மூடிய மடேுகளும் குறிக்கப்படுகின்றன. அதிகமும் பதுக்கையின் மலேே் அமகைக்கப்பட்ட நடுகல் அல்லது பதுக்கையின் அருகின் அமகைக்கப்பட்ட நடுகல் பற்றிய குறிப்புக்களும் உள்ளன. பதுக்கைகள் இல்லாமல் தனியாகவும் நடுகற்கள் அமகைக்கப்பட்டன.

கற்பதுக்கைகளுக்கு அருகில் நடுகற்கள் அமகைக்கப்பட்டவற்றை “வல் ஆண் பதுக்கைக் கடவுட் பணேை்மார் நடுகல் பீலி சூட்டி” (அகம் 35) என்ற பாடலில் கற்குவியலின்மலேே் உள்ள நடுகல் தயெ்வத்தை வழிபடுவதற்காக அக்கல்லில் மயிற்தோகைகளைசை் சூட்டினர் எனவும் “உயர்பதுக்கு இவர்ந்த ததர்கொடி அதிரல் நடெுநிலை நடுகல் நாட்பலிக் கூட்டும்” (அகம் 289) என்ற பாடலில் உடலை மூடிய உயர்ந்த கற்குவியல்களில் காட்டுமல்லிகை ஏறிப் படரும். அம்மல்லிகையின் மலர்கள் கொணை்டு நடெிது காலம் நிலதை்து நிற்கும் நடுகல்லாகிய தயெ்வத்திற்கு நாட்பலியிட்டு வழிபாடு சயெ்வர் எனவும், “பரலுடை மருங்கின் பதுக்கை சரேை்தி” (புறம் 264) என்ற பாடலில் பருக்கைக் கற்களைக் கொணை்டு மடேு அமதை்து மரலில் இருந்து எடுத்த நார்கொணை்டு சிவந்த பூக்களால் கணை்ணியதை் தொடுத்து அழகிய மயிற்பீலியசை் சூட்டிப் பயெரை எழுதி நடுகல்லும் நட்டனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. “வறெியாட்டு பேோன்ற பிறிதொரு சடங்காகக் கல் நட்டு வழிபடும் நடுகல் சடங்கைக் கூறலாம். அகழ்வாய்வுகள் மூலம் கண்டடெுக்கப்பட்டுள்ள ‘பதுக்கைகள்’ எனப்படும் கற்படகைள் தமிழகம் முழுவதும் மிகுதியாகக் கிடதை்துள்ளன. ஊரிருக்கைகள் அமநை்த பகுதிகளில் இவ்வகையான நடுகற்கள் மிகுதியாகக் கிடதை்துள்ளன. வீரனை நினவைுபடுத்தும் வகையில் கல் நடப்பட்டு

Written by - கலாநிதி சு. கணேஸ்வரன் -
Saturday, 18 January 2020 12:56 - Last Updated Saturday, 18 January 2020 13:05

வழிபடப்பட்டவை இவை. இதனை நடுகல் என்று அழைக்கிறோம்.” [1] இவற்றினடாக கற்பதுக்கைகள் அமைக்கப்பட்டு அருகில் நடுகல் நாட்டப்பட்டு வழிபாடியற்றப்பட்ட சயெ்திகள் தளிவாகின்றன.

## (□) □□□□□□□ □□□□□□□□ □□□□□□□□□□□ □□□□□□□□□□□ □□□□□□□□

நடுகற்கள் பரெும்பாலும் ஊரின் எல்லையில் அல்லது ஊரின் ஓதுக்கும் பறுதத்தில் போர் நடைபறெ்ற இடங்களில் அமைக்கப்பட்டன. அகநானறு்றுப் பாலதை்திணைப் பாடல்களில் அதிகமான கறுிப்புக்கள் இவை கறுித்து உள்ளன. “பரிய ஓடை யானை உயர்ந்தோர் ஆயினும் நின்றாங்கும் பயெரும் கானம்.” (அகம் 387) என பரிய மகுபடாம் அணிந்த யானை மீது சலெ்லும் அரசியராயினும் அவ்விடத்தினின்றும் மலேும் சலெ்ல நினைக்காது திரும்பிச் சலெ்லும் அச்சம் மிகுந்த பாலநிலம் எனவும், ஓரும்றை சனெ்றவர் மீளவும் சலெ்லத் தயங்கும் நீண்ட சுரவழியில் அந்நடுகற்கள் உள்ளன எனவும், போர் நடந்த பாலநிலங்களில் வரிசயைாக அமைக்கப்பட்ட நடுகற்களின் அருகில் வாள்களும் கடேகங்களும் வைக்கப்பட்டன என்றும் பாலதை்திணைப் பாடல்கள் கறுிப்பிடுகின்றன.

பறுநானறு்றுப் பாடல்களில், போர்நடந்த இடங்கள், ஊரின் எல்லைப்பறுங்களுடன் ஏரிக்கரைகளில் ஆற்றங்கரைகளில் காட்டுப்பகுதிகளில் அமைக்கப்பட்ட கறுிப்புக்களும் உள்ளன. “இதுவரை தமிழகத்தில் கிடைக்கப்பறெ்ற நடுகற்கள் பரெும்பாலும் மக்கள் வாழ்கின்ற அல்லது வாழ்ந்ததாக அறியப்படும் ஊருக்கு வளெியில்தான் கண்டறியப்பட்டுள்ளன. ஈமக்காடுகள் உள்ள இடங்களிலும் நடுகற்கள் இருந்துள்ளன. இவை உணர்த்துவது யாதனெில் நடுகற்கள் எடுக்கப்படும் இடங்களை நோக்குகையில் வீரன் மடிந்த போர்க்களமாகவோ அல்லது அவனபை் புதைத்த இடமாகவோதான் அனுமானிக்க முடிகின்றது.” [2] இதனடாக நடுகற்கள் அதிகமும் ஊருக்கு வளெியேும் ஊரில் எல்லையிலும் போர் நடைபறெ்ற இடங்களிலும் அமைக்கப்பட்டவை தரியெவருகின்றன.

## (□) □□□□□□□ □□□□□□□ □□□□□□□□□□□□□□□ □□□□□□□□□□

தொல்காப்பியர் காலத்துக்கு முன்னரே நடுகல் அமைக்கும் வழக்கம் தொல்தமிழர் குடிகளிடம் இருந்ததனெ்பதும் அது சடங்கு முறையைாகப் பணேப்பட்டது என்பதும் தரியெவருகிறது. “நடுகல் என்பதன் நரே்ப்பொருள் நடப்படுகின்ற கல் - வீரக்கல் நினைவுச் சின்னக் கூத்துக்கல் என்பனவாகும். இத்தகையை பழக்கங்கள் திடீரனெ எழுவன அல்ல என்பதை நினைவிற் கொள்ளவணே்டும். மலேும் அப்பழக்கங்களிற் சிலக்றுகள் பாடல்களைவிடப் பழமையானவை என்பது மறுையானது. தொல்காப்பியம் இதனை கவிதைக்குரிய பாடுபொருளாக மட்டும் காட்டவில்லை. பாடல்கள் மழுமையைாகக் காட்டும் ஓரு மயெ்மமை என்பதனோடு அதனை ஓரு சடங்காகக் காட்டுவதோடு ஆறு நிலைகளை உடயைதாக அக்கல் நடுதலை எண்ணுகிறது.” [3]

“காட்சி கால்கோள் நீர்ப்படை நடுதல்
சீர்த்தகு சிறப்பிற் பரெும்படை வாழ்த்தலனெ்
றிரும்னற்று வகையிற் கல்லொடு புணர” [4]

இங்கு நடுகல் அமதை்தல் மு்தல் அதன் வழிபாடு வரை ஆறு படிமுறை உரைக்கப்படுகிறது.

i. காட்சி என்பது ஓரு கல்லினதை் தரே்ந்தடெுத்தல் மற்றும் சதெுக்குதல்

ii. கால்கோள் என்பது அக்கலினை நடுவதற்கு நல்ல நேரம் குறித்தல்
iii. நீர்ப்படை என்பது அக்கலலை தீயநீர் கொண்டு கழுவுதல்
iv. நடுதல் என்பது அக்கலினை எவ்விடத்தில் நிறுவவேண்டும் எனத் தீர்மானித்து நடுதல்
v. பெரும்படை என்பது இறந்துபட்ட வீரனின் சிறப்புக்களை அக்கல்லில் பொறித்தல் மற்றும் அவனின் வீரச்செயல்களைக் குறித்து போற்றி விழா எடுத்தலும் விருந்தும் பிறவும் ஆகும்.
vi. வாழ்த்துதல் என்பது இறந்த வீரனை நடுகல் வழியாக வழிபடுதல்

இவற்றினூடாக தொல்காப்பியர் காலத்துக்கு முன்னரே நடுகல் வழிபாடு இருந்தது என்பதும் அது சடங்காக மக்களால் தொடர்ந்து பேணப்பட்டதும் அறியப்படுகிறது.

3. □□□□□□□□□□ □□□□□□□□□□ □□□□□□□□□□□□□□□□ □□□□□□□□□□□□□ □□□□□□□□□□
அகநானூற்றுப் பாடல்களில் போரில் இறந்த வீரர்களுக்கு பெரும் பீடும் எழுதி வலே், கடேகம், வகைக்கப்பட்ட நடுகற்களும் பின்னர் சமெ்மறிக்கூட்டி பலியிடப்பட்ட செய்திகளும் பதிவாகியுள்ளன.

தழையிட்டு மடிய கற்கூவியல் (அகம் 109)
கற்கூவியல் (அகம் 289)
வீரரின் நடுகல் (அகம் 387)
காட்டுயானை ஆள் என உதைத்த நடுகல் (அகம் 365)
மறவர் நடுகல்லில் அம்பு தீட்டுதல் அதனால் நடுகல்லின் எழுத்து பக்கம் தேய்ந்து காணப்படல் (அகம் 297)
உப்புவணிகரின் வண்டில் மானை அழுத்தி சிதைந்த நடுகல் (அகம் 343)
பெரும் பீடும் எழுதிய நடுகல் (அகம் 179)
பெரும் பீடும் எழுதிய எழுத்துடை நடுகல் (அகம் 53)
கற்கூவியல் கொண்ட பதுக்கையும் நடுகல் மான் வலேும் கடேகமும் வகைக்கப்பட்டபட்டவையும் (அகம் 67)
பெரும் பீடும் எழுதி வலே் கடேகம் வகைக்கப்பட்ட நடுகல் (அகம் 131)
நடுகல் தெய்வத்திற்கு மெிறற்றோகை, தூடிமுழக்கூதல், சமெ்மறிக்கூட்டி பலியிட்ட செய்தி கூறிப்பிடப்படுதல் (அகம் 35)

ஆகியன அகநானூற்றுச் செய்யுட்களின்வழி அறியப்படும் நடுகல் பற்றிய கூறிப்புகளாகும்.

மறே்கூறித்த அகநானூற்றுப் பாடல்களில் கற்கூவியற் பதுக்கைகளும் பின்னர் பெரும் பீடும் எழுதி வலே் கடேகம் வகைக்கப்பட்ட நடுகற்களும் காணப்பட்டுள்ளன. பலியிடப்பட்ட செய்தியும் வருகிறது. இங்கு படிப்படியான வளர்ச்சி முறை தெரிகிறது. புறநானூற்றுப் பாடல்களில் அரசர்கள், நிலத் தலைவர்கள், போரில் இறந்த வீரர்கள் ஆகியோருக்கு நடுகற்கள் அமைத்து வழிபடப்பட்ட கூறிப்புகள் உள்ளன. இவை புறநானூற்றுப் பாடல்களில் ஓரு சடங்கு முறைக்கு மாற்றம் பறெுவதை அவதானிக்கலாம்.

புறநானூற்றுப் பாடல்களில் கோப்பெருஞ்சோழன்மீது நட்புக் கொண்டிருந்த பொத்தியார் பாடிய (புறம் 221, 222, 223) பாடல்களிலும்: அதியமான் நெடுமான் அஞ்சியை ஔவையார் பாடிய (புறம் 232) பாடலிலும் நடுகல் வழிபாடு கூறிக்கப்படுகிறது. இவை

தவிர ஏனயை பறநான□ற்றப் பாடல்களில் அதிகமும் நிரமைீ ட்கும் பரோரிலும், அரசனுடன் க□டவே பகமைடிக்கும் பரோரிலும் இறந்த வீ ரர்கள் மீ தே அதிகமான பாடல்கள் பாடப்பட்டுள்ளன.

ஆநிரை மீ ட்கவரும் பரோரில் மாண்டவன் நடுகல். (பறம்.260)
பகை கவர்ந்த ஆநிரை மீ ட்டுத்தந்த பரோரில் வீ ழ்ந்த கரந்தை மறவனின் நடுகல். (பறம்.261)
நிரமைீ ட்டு உயிர்துறந்த வீ ரனுக்கு பீ லியும் கண்ணியும் ச□ட்டி கல் நட்டமை. (பறம். 264)
நிரமைீ ட்டு உயிர் துறந்த வீ ரனின் கல்லுக்கு மாலசை□ட்டுதல். (பறம். 265)
கணவன் பகமைடித்து வருக என முன்னோரின் நடுகல்லபை் பரவியமை. (பறம் 306)
பரோக்குச் சனெ்ற கணவன் நடுகல் மிகுந்த ஊரை உடயைவன் என ஊரின் சிறப்பை பாடுதல். (பறம். 314)
பலியிட்டு நன்னீ ராட்டி நயெ்விளக்கறே்றி நடுகல்லை வழிபடும் சிறப்பை பாடியமை. (பறம். 329)
களிறினை எறிந்து தாமும் வீ ழ்ந்த மலநைாட்டுத் தலவைனின் நடுகல்லதை் தொழுவோம் என பாடியமை. (பறம். 335)

முதலான பறப்பாடல்களில் நடுகல் குறித்து உரகை்கப்பட்டுள்ளன.

மறே்குறித்த பாடல்களில் கல்நடுதல், நன்னீ ராட்டுதல், பீ லி ச□ட்டுதல், பலியிடுதல், நயெ்விளக்கறே்றுதல், மது படதை்தல், மாலை ச□ட்டுதல், வணங்குதல் ஆகிய வழிபாட்டு முறை எடுத்துக்காட்டப்படுதல் கவனிக்கத்தக்கது. நடுகல் அமகை்கும்பரோது இறந்தவர்கள் பழுங்கிய பொருட்களையும் இட்டுப் புததை்தலை (பறம்329, பறம்252, அகம்35) அக்கால மக்கள் வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

தமிழகத்தில் நடுகற்களபை் பற்றி ஆராய்ந்த பரோசிரியர் வி.கசேவராஜ் [5] அமகை்கப்பட்ட நடுகற்களை; நிரமைீ ட்டோர் கல், வடக்கிருந்தோர் கல், பத்தினிப் படிமக்கல், கடலுள் மாய்ந்தோர் கல், ஊர்காத்தான் கல், பணெ் மீ ண்டான் கல், அறம் காத்த நடுகல், கழி பரோண்மகை்கல், சாவாரப் பலிக்கல், அடியார் சமாதி, அரசர் பள்ளிப்படை, புலி குத்திக்கல், பன்றிகுத்திக் கல், குதிரை குத்திக்கல், எழுது பொருதார் கல், மாடு பொறித்த கல், யானபை்பரோர் நடுகல், நாய்க்கு நடுகல் ஆகியனவாக வகபை்படுத்தியுள்ளார். இவற்றுள் சங்ககாலப் பிற்பகுதியில் மீ ட்கப்பட்ட நடுகற்களும் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளன.

**4.** □□□□□□□□□□□ □□□□□□□□□□

தொல்தமிழர் மரபில் நடுகற்கள் வீ ரக்கற்களாகப் பரோற்றப்பட்டிருக்கின்றன. பரோரில் மரணமடநை்தவர்கள் தம் குடிகளகை் காக்க வந்தவர்களாகவும் அவர்கள் தம்மகை் காவல் சயெ்கிறார்கள் என்பதனயையும் மக்கள் நம்பினர். அதனாலயேே வழிவழியாக வந்த நம்பிக்கயைின் அடிப்படயைில் நடுகற்கள் பின்னர் வணக்கத்துக்குரியனவாகப் பரோற்றப்பட்டிருக்கின்றன. இவை தமக்கு முன்னோரை தயெ்வமாகப் பரோற்றி வழிபடும் மரபை எமக்குக் காட்டுகின்றன.

“ஒளிறு ஏந்து மருப்பின் களிறு எறிந்து வீ ழ்ந்ததனெக்
கல்லே பரவின் அல்லது
நலெ் உகுத்துப் பரவும் கடவுளும் இலவே” [6]

Written by - கலாநிதி சு. கணேஸ்வரன் -
Saturday, 18 January 2020 12:56 - Last Updated Saturday, 18 January 2020 13:05

என்ற மாங்கூடி மருதனாரின் பறநானூற்றுப் பாடல் களிற்றை வனைந்த தாமும் வீழ்ந்த நடுகல்லாயினவரின் நடுகல்லதை தொழுவதன்றி நலெல்லும் பூவும் சொரிந்து வழிபடச் சிறந்த கடவுளும் வறோ இல்லை என்று கூறிப்பிடுகிறது. இதனூடாக களிறு எறிந்து படுதோருக்கு நடுகல் அமைத்து அவனையே தெய்வமாக வணங்கும் வீரவழிபாடு எடுத்துக்காட்டப்படுகிறது.

“நடுகல் கைதொழுது பரவும் ஓடியாது
விருந்து எதிர் பறெுகதில் யானே” [7]

என்ற இப்பறப்பாடல் களிறுகள் பொருது சிதைந்த மூளச்செியாலாகிய வலேியும் மக்கள் அரிதாகவே வந்து உண்ணும் நீர்நிலையும் உடயை சிறிய ஊரிலே வாழ்ந்த மறக்கூலப் பணெ் தன் கணவன் பகைமுடித்து வருக என நடுகல்லை வணேடுகிறாள். இப்பாடல் நடுகல்லை வழிபாடு சயெ்யும் ஓரு பணெ்ணகை் கண்டோர் கூற்றாக அமைந்துள்ளது. “தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை 300ற்கும் மறே்பட்ட நடுகற்களை வடார்க்காடு, தரம்பரி மாவட்டங்களில் கண்டு பிடித்துள்ளது. இவற்றில் பரெும்பாலான நடுகற்கள் இன்றும் வழிபாட்டில் உள்ளன. மக்கள் இந்நடுகற்களை கடவுளாக வழிபட்டு வருகின்றனர். இவற்றிற்கு ஆண்டுதோறும் சிறந்த வழிபாடுகள், விழாக்கள் நடத்தப்படுகின்றன. இவற்றின் மூன்னர் இரும்பாலான சூலமும் கத்தியும் இன்றும் நட்டு வகைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றிற்கும் எண்ணயெ் பூசி, மாலை அணிவித்து வழிபடுகின்றனர்.” [8]

**5.** □□□□□□□□ □□□□□□□□□□ □□□□

பரோசிரியர் ச. வயைாபுரிப்பிள்ளை, கமில் சுவலபில், வ. அய். சுப்பிரமணியன் ஆகியோர் சங்கப்பிரதிகளை காலநிரற்படுத்தியதுபோது பரோசிரியர் வீ. அரசு அவர்களும் சடங்கு சார்ந்த தொகையாக்கத்தில் சங்கப் பிரதிகளை காலநிரற்;படுத்துகையில் நான்கு வகையான எல்லைப்பாடுகளை வகுக்கிறார். நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, பறநானூறு, ஐங்குநூறு, பதிற்றுப்பத்து ஆகியவற்றை முதற்தொகுதியாகக் கொண்டு அவற்றின் காலத்தை கி.மு 550 என்ற மலே் எல்லயைகை் கொண்டதாகவும் குறிப்பிடுகிறார். ஆற்றுப்படை நூல்களை (திருமுருகாற்றுப்படை தவிர்ந்த) இரண்டாவதாகவும் கலித்தொகையை மூன்றாவதாகவும் பரிபாடல் மற்றும் திருமுருகாற்றுப்படையை நான்காவதாகவும் வகைப்படுத்துகிறார். இவற்றில் “முதற்தொகுதியில் இச்சடங்கு மிகுதியாக இடம்பறெ்றிருப்பதும் படிப்படியாக அடுத்தடுத்த தொகுதிகளில் இச்சடங்கு குறைவாக இடம்பறெும் தன்மயைை அடிப்படயைாகக் கொண்டு முதல் தொகுதியில் அமைந்த சங்கப் பிரதிகளகை் காலநிரலில் பழமமைிக்கனவாகக் கருத இயலும். நடுகல் மரபும் தொல்பழங்குடிச் சமூக அமபை்பின் அடயைாளத்தகை் கொண்டது. இச்சடங்கு தொல்பழம் பிரதிகளில் இடம்பறெ்று படிப்படியாக வதைீகப் பிரதிகளில் மிகக் குறைந்து பரோயிருப்பதகை் காண்கிறோம். எனவே, தொல்பழஞ்சடங்கைை் கொண்டிருக்கும் பிரதி பழம்பிரதியாக அமைந்திருப்பதகை் காண்கிறோம். நடுகற்களில் காணப்படும் பிராமி எழுத்துக்கள் தமிழின் தொன்மயைான எழுத்து வடிவம் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. கி.மு 550 அளவில் நடப்பட்ட நடுகல் கிடதை்துள்ளது. இதில் பிராமி எழுத்துக்கள் இடம்பறெ்றுள்ளன. இதன்மூலம் தொல் பழம் தமிழ் எழுத்தின் தரவாக அமயைும் நடுகற்கள் சங்க இலக்கியத்தில் பசேப்படுவதன் மூலம் அதன் பழமயைை அறிய முடியும்.” [9]

இவற்றினூடாக சங்கப்பனுவல்களை காலநிரற்படுத்தும்போது முதலில் வகைக்கப்பட்டுள்ள அகநானூறு பறநானூறு ஆகியவற்றில் நடுகல் பற்றிய குறிப்புகள்

Written by - கலாநிதி சு. கணேஸ்வரன் -
Saturday, 18 January 2020 12:56 - Last Updated Saturday, 18 January 2020 13:05

அதிகம் வந்துள்ளமையும் ஏனைய பிரதிகளில் (நற்றிணை-1, குறுந்தொகை-2, ஐங்குறுறு-2, மலைபடுகடாம்-1, பட்டினப்பாலை -1, பரிபாடல் -1, திருமுருகாற்றுப்படை-1) மிகக் குறைந்த பதிவுகளே வந்துள்ளன என்ற உண்மையினையும் கண்டு கொள்ளமுடியும்.

அகநானூற்றுப் பாடல்களில் கற்கவியற் பதுக்கைகளும் நடுகற்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. அவை "எழுத்துடை நடுகற்கள்" என்ற சொல்திகளும் கிடைக்கப்பறெுவதோடு அவற்றுக்கு அருகில் வலே், கடேகம் வகைக்கப்பட்ட சொல்திகளும் உள்ளன. சில பாடல்களில் நடுகற்களின் மூன் பலியிடப்பட்ட சொல்தி வருகிறது. ஆனால் புறநானூற்றில் வழிபாடு இயற்றும் குறிப்புக்கள அதிகமாக உள்ளன. இங்கு நடுகற்கள் ஓரு சடங்கு முறையாகவும் வழிபாட்டுக்கு உரியதாகவும் மாற்றமடவைதை அவதானிக்கலாம்.

நடுகற்களை வணங்குவதால் மழை வளம் பரெுகும், நாடு சிறப்புறும், பயிர் வளம் சிறக்கும், போருக்குச் சனெ்ற நிலத்தலவைர்களும் வீ ரர்களும் வறெ்றி பறெ்று மீ ள்வார்கள், மக்கள் பாதுகாக்கப்பட்டு சிறப்பயெ்துவார்கள், நோய் முதலியவற்றிலிருந்து விடுபடுவார்கள் முதலான நம்பிக்கைகள் இவற்றினூடாக வளிெப்படுத்தப்படுகின்றன. இதனாலயேே "வளே்வி நடாத்தி மடை கொடுத்துச் சிறு தயெ்வங்களை வழிபடுவது இன்றும் வழக்கத்தில் உள்ளது எண்ணத்தக்கது. ஐயனார், மதுரவைீ ரன், இருளன், கறுப்பன், நொண்டி முதலியன நடுகல் தயெ்வங்களை ஓத்தனவாயுள்ளன." [10] என சு. வித்தியானந்தன் அவர்கள் நடுகல் வழிபாடு, கிராமிய தயெ்வ வழிபாடாக மாறியமை குறித்து எழுதுகிறார். இதனாலயேே மூன்னோரை வழிபடும் மரபாக நடுகற்கள் அமைந்துள்ளன என்ற முடிவுக்கு வரமுடிகிறது.

"வீ ரக்கற்களை நிறுவுவது என்பது அக்காலச் சமூகத்தின் இறப்புச் சடங்கோடு தொடர்புடையை நம்பிக்கைகள் பழக்கங்களின் ஓரு கூறாகும். இந்த பழக்கமும் இதனை ஓட்டிய நம்பிக்கையும் தனெ்னிந்தியாவில் கி.மு மூதலாயிரம் ஆண்டுகளின் பிற்பாதியில் நிலவிய இரும்புக் காலப் பரெுங்கற் பூதவைுப் பழக்கத்தின் ஓரு பகுதியாகும். இதன் இறுதிச் சடங்கு எச்சங்கள் நாடு மழுவுதும் காணப்படுகின்றன. மலேும் இந்தப் பழக்கத்தோடு இறந்த மூன்னோரை வழிபடும் மரபும் மறுப்பட நிலவிப் பின் இதனோடு கலந்திருந்ததாகக் கருதப்படுகிறது." [11] இறந்தவர்களின் நினைவும் அவர்களை நடுகற்களாக அமதைத்து வழிபடுவதால் தமக்கு அவை ஆற்றலை வழங்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் மக்கள் இவற்றை வணங்கியிருக்கின்றனர்.

**6.□□□ □□□□□□□□□**

சங்கப்பனுவல்களில் அகநானூறு புறநானூறு ஆகியவற்றின் வழி நடுகற்பண்பாடு இருந்துள்ளது என்பதும் அவை நாடுகாக்கும் போரிலும் நிரமைீ ட்கும் போரிலும் தம் கூடிகளகை் காக்கும் ஏனைய வழிகளிலும் தம்மூயிரகை் கொடுத்து மாண்ட வீ ரர்களை நினகை்கும் வகையில் அமகை்கப்பட்டவை என்பது எழுத்துக்களின் வழியிலான ஆதாரங்களின் ஊடாக அறியப்படுகின்றன. உயிர்நீ த்த வீ ரர்களுக்கு கல்நட்டு வழிபாடு இயற்றும் வழக்கம் அதிகமும் தொல்கூடிகளின் பண்பாட்டில் நிகழ்ந்துள்ளன. இது தொடர்ச்சியாக ஓரு சடங்குமுறையாகப் பணேப்பட்டு வந்துள்ளது. மு□த்தோரை வழிபடும் இந்நடுகற் பண்பாடு பிற்காலத்தில் நாட்டுப்புறத் தயெ்வ வழிபாடாக நிலபைறெ்று வளர்ந்திருக்கின்றது. இதனூடாக தமிழரின் வழிபாட்டு மரபு என்பது நடுகற்களின் வழியாகவே பணேப்பட்டு வந்துள்ளது என்பது சங்கப் பிரதிகளின் வழி தளிெவாகப் பதிவாகியுள்ளன. இவற்றை அறிவியல் பூர்வமாக ஏற்றுக்கொள்வதற்கு

ஏதுவாக தமிழ்நாட்டில் தொல்பொருள் ஆய்வுகளின் ஊடாகக் கண்டுபிடிக்கப்பட்ட நடுகற்களும் அண்மையை கீழடி ஆய்வுகளிற் கிடைத்த பழந்தமிழரின் பழங்கு பொருட்களும் மலேும் உறுதிப்படுத்துகின்றன. இவற்றின்வழி தமிழரின் வழிபாடு மரபின் வேர்களைக் கண்டடையை முயும் என்று கருத இடமுண்டு.

□□□□□□□□□□□□□□□□□□

1. அரசு, வீ ., (2009), சங்க நூல்களில் இடம்பெற்றிருக்கும் சடங்குகள் சார்ந்த தொகையாக்கம், பூதிய பனுவல், சர்வதசேத் தமிழியல் ஆய்விதழ், இதழ் 3, ப.6
2. பிரபு, ஆ., நடுகல் வழிபாடும் தமிழர் நம்பிக்கையும், https://ourjaffna.com/tradition/
3. கலைாசபதி, க., (2006), தமிழ் வீரநிலகை் கவிதை, கும்ரன் பூத்தக இல்லம், சனெ்னை,ப.325
4. தொல்காப்பியம், பூறத்திணையியல், (2007), கணசேயைர் பதிப்பு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சனெ்னை, நூற்பா 60:19-22
5. கசேவராஜ், வே., (2008), தனெ்னிந்திய நடுகற்கள், காவ்யா, சனெ்னை.
6. பூறநானூறு, 335:10-12
7. மலேது, 306:4-5
8. அர்த்தநாரீ சுவரன்,பி., (1996), கல்வடெ்டுவழிப் பண்பாட்டியல், கொங்குவளேி் பதிப்பகம், சனெ்னை. ப.8
9. அரசு, வீ ., மலேது 1, ப.6-7
10. வித்தியானந்தன், சு., (1971), தமிழர் சால்பு, பாரி பூத்தகப் பண்ணை, சனெ்னை. ப.125
11. கலைாசபதி, க., (2006), மு.கு.நூல், 325-326

□□□□□□□□□□

1. அகநானூறு, நியூ சஞெ்சுரி பூக் ஹவுஸ், சனெ்னை, 2004.
2. பூறநானூறு, நியூ சஞெ்சுரி பூக் ஹவுஸ், சனெ்னை, 2004.
3. சங்க இலக்கியம் கவிதையும் கருத்தும், சிவத்தம்பி, கா., உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 2009.
4. பண்டதை் தமிழ்ப் பனுவல்கள், சதீ ஸ்.கோ., நியூ சஞெ்சுரி பூக் ஹவுஸ், சனெ்னை, 2016
5. தமிழ் வீரநிலகை் கவிதை, கலைாசபதி, க., கும்ரன் பூத்தக இல்லம், சனெ்னை, 2006.
6. தொல்லியல் சுவடுகள், 2011, வதோசலம், வி., டகெ்லா, ச.,(பதி.ஆ) நியூ சஞெ்சுரி பூக் ஹவுஸ், சனெ்னை, 2011.
7. வீர வழிபாடு, https://www.projectmadurai.org/pm_etexts/utf8/pmuni0577.html

(யாழ்ப்பாணப் பல்கலகை்கழகத் தமிழ்த்துறயைின் முதலாவது அனதை்துலகத் தமிழியல் ஆய்வு மாநாட்டில் 11 ஜனவரி 2020 இல் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை. மாநாட்டு மலர் பக். 153-160)

kuneswaran@gmail.com